சென்னை கிழக்கு மாவட்டத்தில் 6 சட்டமன்றத் தொகுதிகளில்

# இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் கருத்தியல் தொடர் பேச்சரங்கம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, நவ.3-

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்றத் தொகுதிகளில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களால் “என் உயிரினும் மேலான” என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சு போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் கருத்தியல் தொடர் பேச்சரங்கம் நடைபெறுகிறது என அமைச்சர் - மாவட்டச் செயலாளர் - பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.



அவரது அறிவிப்பு வருமாறு :

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களால் “ என் உயிரினும் மேலான” என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சு போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் கருத்தியல் தொடர் பேச்சரங்கம் நடைபெறும் விவரம் வருமாறு:

**தொடர் பேச்சரங்கம் 1**

02.11.2024, சனிக்கிழமை, மாலை 6.00 மணி அளவில், சென்னை டவுட்டன் ரித்தர்டன் சாலையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ திடலில், எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர் தலைமையில், திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவரும்சமூக நீதி கண்காணிப்பு குழுத் தலைவருமான சு.ப.வீரபாண்டியன் அவர்களும் மற்றும் பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் மோகநிதி அவர்கள் “தத்துவமே எங்கள் தனித்துவம் ” என்ற தலைப்பிலும், செல்வி.செ.ஜோதி அவர்கள் “சமத்துவ பாதையில் சமூக நீதி” என்ற தலைப்பிலும் உரையாற்றினார்.

**தொடர் பேச்சரங்கம் 2**

03.11.2024, ஞாயிற்றுக் கிழமை, காலை 11.00 மணியளவில் சென்னை, அம்பத்தூர், பி.எஸ்.பி. கன்வென்ஷன் சென்டரில், அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமையில் முனைவர். பர்வின் சுல்தானா அவர்களும் பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் தஞ்சை ஜோ.வியானி விஷ்வா அவர்கள் “திராவிட மாடலே தேசத்தின் தீர்வு” என்ற தலைப்பிலும், அ.தா.டெக்ஸின் ரொமேரியோ அவர்கள் “எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் எப்போதும் வெற்றியை படைக்கும் ” என்ற தலைப்பிலும் உரையாற்றுகிறார்கள்.

**தொடர் பேச்சரங்கம் 3**

04.11.2024, திங்கட்கிழமை, மாலை 6.00 மணி அளவில், சென்னை ஓட்டேரி குக் சாலையில் உள்ள ஹேம்ராஜ் பவனில் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன் தலைமையில் கழக கொள்கை பரப்பு செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவருமான திண்டுக்கல் ஐ.லியோனி அவர்களும், பட்டையை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் திரு.மாறன் அவர்கள் “அறமும் அன்பும் எங்கள் கண்கள்” என்ற தலைப்பிலும் திரு.பம்மல். வீ.தினேஷ் அவர்கள் “பெண்மையை போற்றுவோம்” என்ற தலைப்பிலும் உரையாற்றுகிறார்கள்.

**தொடர் பேச்சரங்கம் 4**

05.11.2024, செவ்வாய்கிழமை, காலை 11.00 மணி அளவில், சென்னை, எழும்பூர், இம்பீரியல் ஹோட்டல் வளாகத்தில், கழக தலைமை செயற்குழு உறுப்பினரும், சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் அவர்கள் தலைமையில், திராவிடர் கழக பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி அவர்களும், பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் செல்வி. ம.சிவரஞ்சினி அவர்கள் “மகத்தான வளர்ச்சி மருத்துவ புரட்சி ” என்ற தலைப்பிலும் செல்வி.ரூ.கீர்த்தனா அவர்கள் “நோயற்ற தமிழகமே எங்கள் இலக்கு” என்ற தலைப்பிலும் உரையாற்றுகிறார்கள்.

**தொடர் பேச்சரங்கம் 5**

08.11.2024, வெள்ளிக்கிழமை, மாலை 06.00 மணி அளவில், சென்னை, திரு.வி.க.நகர் அம்பரீஷ் மகாலில், கொளத்தூர் கிழக்கு பகுதி செயலாளர், ஐ.சி. எப்.வ.முரளிதரன் தலைமையில், துணைப் பொதுச்செயலாளர், திராவிடர் கழகம், வழக்கறிஞர். சே. மெ.மதிவதினி அவர்களும், பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள், திரு.தி.கோகுல் அவர்கள் “மக்கள் அதிகாரமே திராவிட ஜனநாயகம்” என்ற தலைப்பிலும், செல்வி. சீ.ஹரிக்ருபா அவர்கள் “பெண்ணுக்கு முதலிடம் தருவது எங்கள் திராவிடம்” என்ற தலைப்பிலும் உரையாற்றுகிறார்கள்.

**தொடர் பேச்சரங்கம் 6**

09.11.2024, சனிக்கிழமை, மாலை 06.00 மணி அளவில், சென்னை, பிராட்வே, ஹயாத் மகாலில், துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர், எஸ்.இராஜசேகர் தலையில், கழக தீர்மானக்குழு செயலாளர் திரு.கம்பம் செல்வேந்திரன் அவர்களும், பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் செல்வி. பா.ஸ்ரீலேகா அவர்கள் “எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் திராவிடம் அதை படைக்கும்” என்ற தலைப்பிலும், செல்வி.க.பார்கவி, “உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்” என்ற தலைப்பிலும் உரையாற்றுகிறார்கள்.

**தொடர் பேச்சரங்கம் 7**

10.11.2024, ஞாயிற்றுக் கிழமை, மாலை 06.00 மணி அளவில், சென்னை, அயனாவரம், காமராஜர் திருமண மண்டபம், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு, தலைமையில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் சபாபதி மோகன் அவர்களும் பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் திரு.மா.பூபதி அவர்கள் “துறை தோறும் வளர்ச்சி தமிழ் நாட்டின் எழுச்சி” என்ற தலைப்பிலும், கவிஞர் தூயவன் (எ) ம.ஜ.சந்தீப் அவர்கள் “பக்தர் உரிமை வளர்ப்போம்” என்ற தலைப்பிலும் உரையாற்றுகிறார்கள்.

**தொடர் பேச்சரங்கம் 8**

13.11.2024, புதன்கிழமை, மாலை 06.00 மணி அளவில், சென்னை, பாரிமுனை, இராஜா அண்ணாமலை மன்றத்தில், துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர், எஸ்.முரளி, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், திருச்சி என்.சிவா அவர்களும், பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் திரு. இரா.தமிழ்வாணன் அவர்கள் “நல்லதை மட்டுமே செய்வோம்” என்ற தலைப்பிலும், திரு.அருணை மா.மதன்குமார் அவர்கள் “முதல்வரால் இது முதன்மை மாநிலம், புதல்வரால் இது இன்னும் பேர் பெறும்” என்ற தலைப்பிலும் உரையாற்றுகிறார்கள்.

மேற்கண்ட பேச்சரங்கத்தில் தொகுதிகளுக்குட்பட்ட நாடாளு மன்ற உறுப்பினர்கள்: டி.ஆர். பாலு. எம்.பி, தயாநிதிமாறன் எம்.பி, டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி, மேயர் பிரியாராஜன், சட்ட மன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன், பா.ரங்கநாதன், மண்டலகுழு தலைவர்கள்: பி.கே.மூர்த்தி, கூ.பீ.ஜெயின். பி.ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ்குமார், பகுதி கழகச் செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராஜன், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, சொ.வேலு, வி.சுதாகர், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ் மற்றும் மாநில நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; இந்தியத் தேர்தல் ஆணையம், இந்திய தேசியக் காங்கிரஸ் மீது தாக்குதல் தொடுத்துள்ளதே ?

**பெரியதம்பி :** ஆமாம் தம்பி; அரியானா மாநிலத் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் செய்த குளறுபடிகள் தொடர்பாகவே இந்த மோதல்.

**இந்திய அரசியல் சட்ட அடிப்படையிலான ஆணையம், சந்தேகங்களுக்குத் தக்க விளக்கம் அளித்திட வேண்டிய கடமையை நேர்மையாக நிறைவேற்ற வேண்டிய இடத்தில் இருக்கிறது. ஆனால், அத்தகைய கடமையிலிருந்து தேர்தல் ஆணையம் தவறிவிட்டதோ என்ற அய்யப்பாடு அரசியல் சாராதோர் இடையேயும் எழுந்துள்ளது.**

**அரசியல் சட்ட அமைப்புகளையெல்லாம், ஒன்றிய பா.ஜ.க. அரசு கையில் எடுத்துக்கொண்டு விட்டதோ என்ற கவலை பல்வேறு முனைகளிலும் படர்ந்துவிட்டது.**

**“மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம்; கங்கையே சூதகமானால், எங்கே போவது ?” என்று பசும்பொன் தேவர் திருமகனார் சொன்னதை எடுத்துக்காட்டி, அன்றொருநாள் கலைஞர் தொடுத்த வினாக் கணை, இன்றளவும் பாய்ந்து கொண்டுதானே இருக்கிறது ! வினாவுக்கு விடை எங்கே ?**

திராவிட மாடல் அரசு

# பெண்களுக்கு ரூ.1000 வழங்கும் திட்டத்தால் விற்பனை அதிகரிப்பு!

சென்னை, நவ.3-

இந்த தீபாவளிக்கு ஜவுளி அதிகமாக விற்பனை செய்ததற்கு தமிழக அரசு பெண்களுக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கி வருவதும் ஒரு காரணமாக கூறப்படுகிறது.

இந்த பணத்தை சேமித்து வைத்து, பெண்கள் அதிகமாக கடைகளுக்குச் சென்று ஜவுளி, பட்டாசு, இனிப்புகள் என்று தீபாவளிக்கு அதிக அளவில் பொருட்களை வாங்கிச் சென்றனர்.

ஆண்களை எதிர்பார்க்காமல் தங்களுடைய கையில் பணம் இருந்ததால், தீபாவளியை அவர்கள் சிறப்பாக கொண்டாடியுள்ளனர். மக்களிடம் அதிக அளவில் பணம் புழங்கியதால் விற்பனை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஊட்டச்சத்து குறைபாடுள்ள

# 10 லட்சம் குழந்தைகளை மீட்டெடுத்த திராவிட மாடல் அரசு!

## உயர் மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு ஏற்பாடு!

சென்னை, நவ.3-

ஒரு குழந்தையின் வாழ்க்கையில் முதல் ஆயிரம் நாட்களுக்குள் உண்ணும் மோசமான ஊட்டச்சத்து அவர்களுக்கு பல எதிர்மறை காரணங்களை ஏற்படுத்தும். இது குன்றிய வளர்ச்சி, அறிவாற்றல் திறன் மற்றும் பள்ளி செயல்திறன் குறைதல், வயிற்றுப் போக்கு போன்ற நோய்களுக்கு வழி வகுக்கும். ஒரு அறிக்கையின்படி இந்தியாவில் 68 சதவீதம் குழந்தைகள் 5 வயதிற்கு முன்பே இறக்கின்றனர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

தமிழகத்தில் ஆரோக்கியமான குழந்தைகளே, நாட்டின் வளமான எதிர்காலம் என்பதை கருத்தில் கொண்டு, முதல்வர் ஸ்டாலின் கடந்த 2022ம் ஆண்டு மே மாதம் 7ம் தேதி அன்று சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதில் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை நலமுடன் வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன், மாவட்ட அளவில் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்கிறோம் என்றும் மருத்துவ உதவிகள் தேவைப்படும் குழந்தைகளுக்கு மருத்துவ உதவியும், ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் ஒன்றும் ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது என்று கூறியிருந்தார்.

அதனை செயல்படுத்தும் விதமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை மற்றும் சுகாதாரத்துறை ஒன்றிணைந்து 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளுக்கு சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தை மற்றும் ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகள் ஆகியோரைப் பிரித்தறிந்து குழந்தைகளின் ஊட்டச் சத்துக் குறைபாட்டினை நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

‘ஊட்டச்சத்தை உறுதி செய்’ என்ற புதிய திட்டத்தினை 2022ம் ஆண்டு மே மாதம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதற்காக சிறப்பு மருத்துவ பரிசோதனை முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் நடந்தது. இதில் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் வயதிற்கேற்ற எடையின்மை, உயரமின்மை மற்றும் மெலிவுத்தன்மை ஆகிய குறைபாடுகளை கண்டறிந்து அவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சியினை மேம்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழகத்தில் மொத்தம் 99 லட்சத்து 5 ஆயிரத்து 289 குழந்தைகள் உள்ளனர்.

இதில் 10 லட்சம் குழந்தைகளுக்கு பல்வேறு குறைபாடுகள் இருப்பது சோதனையில் கண்டறியப்பட்டது. இதன்மூலம் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடையவர்களாக கண்டறியப்பட்டுள்ள குழந்தைகள் கண்காணிக்கப்பட்டு அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் சிறப்பு மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படும் குழந்தைகளின் விவரங்கள் அதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள சிறப்பு செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு கண்காணிக்கப்படும்.

மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பிறகு ஊட்டச்சத்து மட்டும் தேவைப்படும் குழந்தைகளுக்கு தனியாக சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குழந்தைகள் பல்வேறு நோய் தாக்குதல்களுக்கு ஆளாகின்றனர். இதை முற்றிலும் தடுக்கும் வகையில் தமிழக அரசின் சார்பில் ஊட்டச்சத்தை உறுதி செய் என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி துறை மூலமாக சிறப்பு வளர்ச்சி கண்காணிப்பு இயக்கம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு அங்கன்வாடி, ஆரம்ப பள்ளிகளில் சுகாதாரத்துறை சார்பில் மருத்துவ குழுவினர் நேரடியாக குழந்தைகளுக்கு பரிசோதனை மேற்கொண்டனர். அப்போது குறைபாடு உள்ள குழந்தைகள் குறித்து செயலியில் பதிவேற்றம் செய்து அவர்களுக்கு தேவையான மருத்துவ சேவை வழங்கப்படுகிறது.

குறிப்பாக குழந்தைகள் நல மருத்துவரிடம் அழைத்துச் சென்று அவர்களுக்கு எந்த மாதிரியான உடல் பாதிப்பு உள்ளது? அவர்களுக்கு என்ன சிகிச்சை அளிப்பது? மேலும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு சத்தான உணவுகள் வழங்குவது குறித்தும் ஆலோசனை வழங்கப்படுகிறது. குறிப்பாக குழந்தைகளுக்கு பிறவி கோளாறு, ஊட்டச்சத்து குறைபாடு எடையின்மை, உயரமின்மை மற்றும் மெலிவுத்தன்மை, இருதய பாதிப்பு, மூளை வளர்ச்சி பாதிப்பு, மன பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளை கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தேவைப்படும் குழந்தைகளுக்கு அரசு மருத்துவக்கல்லூரிகள் மற்றும் சென்னையில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனைகள் மூலம் உயர் மருத்துவ சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்படும். அதிகளவில் பாதிப்பு உள்ள குழந்தைகளுக்கு முதல்வரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் இலவசமாக மருத்துவ சிகிச்சை முழுமையாக மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

★ குறைபாடு குழந்தைகளுக்கு நியூட்ரீஷியன் கிட்

பெரியவர்களை ஒப்பிடும் போது குழந்தைகளுக்கு அவ்வளவு விரைவாக எடை குறையாது அல்லது அதிகரிக்காது. ஆனால் உங்கள் குழந்தைக்கு மால் நியூட்ரீஷியன் என்ற ஊட்டச்சத்து குறைபாடு இருந்தால், குழந்தை எடை குறைந்து மெலிந்து, சில ஊட்டச்சத்துக்கள் இல்லாமல் இருந்தால் உடல் பருமனாகவும், விரைவாக உடல் எடையும் அதிகரிக்கும். குழந்தைகளுக்கு அவ்வப்போது காய்ச்சல், சளி ஆகியவை தோன்றும்.

வளரும் குழந்தையின் நோய் எதிர்ப்பு சக்தி பாக்டீரியா மற்றும் வைரஸ் தொற்றுகளை எதிர்த்து செயல்படும் பொழுது உடல் ஒரு சில அறிகுறிகளின் மூலம் வெளிப்படுத்தும். ஆனால் குழந்தைக்கு அடிக்கடி உடல்நலக் குறைபாடு ஏற்படுகிறது என்றால் அவர்களால் நோய் பாதிப்பை எதிர்த்து போராடும் அளவுக்கு போதிய ஊட்டச்சத்து கிடைப்பதில்லை என்று பொருள். இதை நிவர்த்தி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி துறை சார்பில் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு நியூட்ரீஷியன் கிட் இலவசமாக வழங்கப்படுகிறது. அதில் ஊட்டச்சத்து அதிகமாக உள்ள உணவு பொருட்கள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 22 கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் சிரமங்களை குறைக்கும் வண்ணம் தூய்மை பணியாளர்களுக்கு குப்பைகளை எடுத்துச்செல்ல இ–கார் பேட்டரி வாகனம் வழங்கும் நிகழ்ச்சியை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கொடி அசைத்து துவக்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, மாவட்ட ஊராட்சிகுழு தலைவர் எம்.பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், துணைத்தலைவர் ஹேமலதா மணிகண்டன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார் நத்தம் முருகேசன், வட்டார வளர்ச்சி அலுவலர் அருள்கலாவதி உட்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

★ இந்தியாவில் 68 சதவீதம் குழந்தைகள் 5 வயதிற்கு முன்பே இறக்கின்றனர் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

★ தமிழகத்தில் மொத்தம் 99 லட்சத்து 5 ஆயிரத்து 289 குழந்தைகள் உள்ளனர். இதில் 10 லட்சம் குழந்தைகளுக்கு பல்வேறு குறைபாடுகள் இருப்பது சோதனையில் கண்டறியப்பட்டது.

★ குழந்தைகளுக்கு பிறவி கோளாறு, ஊட்டச்சத்து குறைபாடு எடையின்மை, உயரமின்மை மற்றும் மெலிவுத்தன்மை, இருதய பாதிப்பு, மூளை வளர்ச்சி பாதிப்பு, மன பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளை கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

★ ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு உண்பதற்கு தயாராக உள்ள சிகிச்சை உணவு 8 வாரங்களுக்கு அளிக்க ரூ.18.68 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ ஊட்டச்சத்து குறைபாடுடைய 06 மாதக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு ரூ.8.68 கோடி செலவில் சத்துப் பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

★ 3,038 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை தமிழகத்தில் ஊட்டச்சத்து உறுதி செய்யும் திட்டத்தின் கீழ் 6 வயது வரையுள்ள மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 10.26 லட்சம் குழந்தைகள் ஆர்எஸ்பிகே குழுவினரால் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டனர். அதில் 2 லட்சம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பதிக்கப்பட்டு இருந்தனர். அதில் 43,200 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை உட்பட வெவ்வேறு மருத்துவச் சிகிச்சைகள் மாவட்ட மருத்துவ மனைகளில் அளிக்கப்பட்டது.

ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு உண்பதற்கு தயாராக உள்ள சிகிச்சை உணவு 8 வாரங்களுக்கு அளிக்க ரூ.18.68 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையினால் ஊட்டச்சத்து குறைபாடுடைய 06 மாதக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு ரூ.8.68 கோடி செலவில் சத்துப் பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது. 6 மாதம் முதல் 6 வயதுடைய கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 92,015 குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை உணவு அளிக்கப்பட்டதில் 61,788 (66.6%) குழந்தைகள் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

அதேபோன்று 06 மாதக் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 14,901 குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்கள் பிறப்பு கூடுதல் சத்து உட்கொண்டதினால் 13,319 (89.4%) குழந்தைகளின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அனைத்துக் குழந்தைகளின் வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளின் வளர்ச்சியில் முன்னேற்றத்தினை கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல் குழந்தையின் வளர்ச்சியில் குறிப்பாக முதல் 6 மாதத்தில் ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தினைப் பற்றி மிகுந்த விழிப்புணர்வினை உருவாக்கியுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பிறவியிலேயே கண்டறியப்பட்ட இருதய நோய், பிறவியிலேயே கண்டறியப்பட்ட மூளை வளர்ச்சி குறைபாடு, பிறவி பார்வை குறைபாடு, பிறவி காது கேளாமை, பிறவி கால் ஊனம் போன்ற பிறவி குறைபாடுகளை உடைய 3,038 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தற்பொழுது அவர்கள் நலமாக உள்ளனர்.